கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

முன்னிலை - திரு. S. ராஜசிம்மவர்மன், பி.ஏ, பி.எல் ( Hons),
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056 தமிழ் பராபவ வருடம் சித்திரை மாதம் 03 ம் நாள்
( முதல் நிலை பதிவேடு வழக்கு எண். 78/ 2025 )
( நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, விழுப்புரம் )
( தாலுக்கா காவல் நிலைய குற்ற எண். 407 /2023 )

**அமர்வு வழக்கு எண் . 191 /2025**

**(CNR NO. TNVP 01 - 004680 - 2025 )**

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசுக்காக | - | காவல் ஆய்வாளர்,<br>தாலுக்கா காவல் நிலைய குற்ற எண். 407 /2023. |
| 2. | குற்றம்சாட்டவர் பெயர், வயது, வேலை, தந்தை பெயர் மற்றும் முகவரி | | வீரபத்திரன் ( வயது 39/2023)<br>த/பெ. கலியன்,<br>முருகன் கோவில் தெரு,<br>ஜானகிபுரம் கிராமம்,<br>விழுப்புரம் மாவட்டம். |
| 3. | சம்பவ நாள் | : | 01.06.2023 |
| 4. | புகார் நாள் | | 02.06.2023 |
| 5. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 02.06.2023 |
| 6. | எதிரி பிணையில் சென்ற | : | எதிரி - 22.06.2023 |

| | | | |
|---|---|---|---|
| | நாள் | | |
| 7. | எதிரி மீதான குற்றச்சாட்டு | : | எதிரி மீது இதச பிரிவுகள்.294(பி), 436 ன் கீழ் |
| 8. | எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | | எதிரி மீது இதச பிரிவுகள். .294(பி), 436 ன் கீழ் . |
| 9. | எதிரியின் பதில் | | எதிரி இதச பிரிவுகள். .294(பி), 436 ன் கீழ் குற்றவாளி அல்ல. |
| 10 | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | - | 16.10.2025 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | | 15.04.2026 |
| 12. | நீதிமன்றத்தின் தீர்மானம் | | எதிரி இதச பிரிவுகள் .294(பி), 436 ன் கீழ் குற்றவாளி அல்ல . |
| 13. | நீதிமன்றத்தின் தீர்ப்பும் தண்டனையும், | - | முடிவாக , எதிரி மீது இதச பிரிவுகள் . .294(பி), 436 ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு . 235 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். இவ்வழக்கில் |

| | | | |
|---|---|---|---|
| | | | எதிரிக்கு ஏற்பட்டுள்ள பிணைமுறிகள் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் இரத்தாகும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 14. | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்ட நாள் | | எதிரி விடுதலை செய்யப்பட்டதால், தீர்ப்பின் நகல் வழங்கப்படவில்லை. |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | | இல்லை |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக 15.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு.இரா.சுப்பராயலு அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. K.R. செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

விழுப்புரம் தாலுக்கா, ஜானகிபுரம் கிராமத்தில் வசித்து வரும் இவ்வழக்கு 1வது சாட்சி சிவகங்கா என்பவருக்கும் எதிரியான வீரபத்திரன் த/பெ. கலியன் என்பவருக்கும் எதிரியின் மகன்கள் மீது பாலியல் தொந்தரவு சம்பந்தமாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தது சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 01.06.2023 ம் தேதி 18.30 மணிக்கு மேற்படி வீரபத்திரன் 1வது

சாட்சியின் வீட்டருகே குடிபோதையில் வந்து சாட்சி.1 யை பார்த்து தேவிடியா இதெல்லாம் ஒரு பொழப்பா என்று அசிங்கமாக திட்டி நீ தானே என் மகன்கள் மீது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாய் . உன்னுடைய வீட்டை கொளுத்தி இந்த ஊரை விட்டே ஓட செய்கிறேன் பார் என்று அசிங்கமாக திட்டியும் பின்னிட்டு அன்றைய தினம் அதிகாலை 03.00 மணிக்கு சுமார் 50,000/- மதிப்புள்ள பொருட்களையும் 1வது சாட்சிக்கு சொந்தமான வீட்டையும் தீயிட்டு கொளுத்தியும் குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியானவர் இதச பிரிவுகள். 294(பி), 436 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக விழுப்புரம் தாலுக்கா காவல் ஆய்வாளர் அவர்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலித்த வகையில், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1 அவர்கள் இந்த வழக்கை முதல் நிலை பதிவேடு வழக்கு எண். 78/2025 ஆக கோப்பிற்கு எடுத்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச. பிரிவு. 207 - ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கி, பிரிவு. 436 ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கக்கூடியது என்பதால், கு.வி.மு.ச. பிரிவு. 209 (அ) ன் படி இவ்வழக்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. விழுப்புரம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அந்நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண். 191 / 2025 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவு எண். **D.No. 6180/2025** நாள் **21.08.2025** தேதிய உத்தரவுபடி வழக்கு கோப்புகள் அனுப்பப்பட்டு 03.09.2025 அன்று இந்நீதிமன்றத்திற்கு

வந்துள்ளது.

3) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரி ஆஜரானவுடன், கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் இந்த அமர்வு வழக்கை கு.வி.மு.ச. பிரிவு . 226 ன் கீழ் திறப்பு செய்தார். இவ்வழக்கில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய அரசு தரப்பில் முக நோக்கு வழக்கு உள்ளது என முடிவு செய்து, எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் . 294(பி), 436 ன் படியும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து அவற்றின் சாராம்சத்தை எதிரிக்கு தமிழில் விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி அவற்றை மறுத்து அவர் குற்றவாளி அல்ல என்று தெரிவித்ததால் இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கவேண்டி அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா 6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருட்கள் சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையிலானவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச. பிரிவு. 313(1) (ஆ) பிரிவின் கீழ் எதிரியிடம் விரிவாக விளக்கி வினவிய போது, எதிரி சாட்சியத்தை பொய் என மறுத்தார் . எதிரி தரப்பில் சாட்சிகள் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால்

சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இருதரப்பும் கேட்கப்பட்டது.

**7) அரசு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களில் இருந்து தெரியவரும் அரசு தரப்பின் விவரங்கள் பின்வருமாறு :-**

(i) அ. சா. 1 திருமதி. சிவகங்கை தனது சாட்சியத்தில், " எதிரி வீரபத்திரனை தனக்கு தெரியும் என்றும், அவர் தனக்கு அண்ணன் முறை ஆவார் என்றும், வீரபத்திரன் குடும்பத்திற்கும் தங்கள் குடும்பத்திற்கும் இடையில் எந்த முன் விரோதமும் இல்லை என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நாங்கள் தங்கள் வீட்டில், தான், தனது கணவர் வினோத், என்பாண்டி, மாரிமுத்து, தன் மகன்கள் தரணிதரன், மோனிஷ் ஆகியோர் அன்று இரவு வீட்டில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தபோது, தங்கள் வீட்டின் கூரை எரிவதாக வெளிச்சம் தெரிந்து நாங்கள் எழுந்து பார்த்தோம் என்றும், வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது என்றும், நாங்கள் வெளியே சென்று இதற்கு காரணம் யார் என்று தேடினோம் என்றும், யார் என்று தங்களுக்கு தெரியவில்லை என்றும், வீடு எப்படி எரிந்தது என்று தங்களுக்கு தெரியாது என்றும், வீட்டின் மூலையில் எரிந்து கொண்டிருந்தது என்றும், தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தோம்என்றும், தீயணைப்பு துறையினர் வந்து தீயை அணைத்தனர் என்றும், இது சம்பந்தமாக விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் சென்று விவரம் சொன்னேன் என்றும், விழுப்புரம் தாலுக்கா காவல்

நிலைய போலீசார் தன்னிடம் எழுதாத ஒரு வெள்ளைத் தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், காவல்துறையினர் வந்து விசாரணை செய்தார்கள் என்றும், ஆனால் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும், அங்கிருந்து பொருட்கள் எதையாவது காவல்துறையினர் எடுத்துச் சென்றார்களா? என்றால் எனக்கு தெரியாது என்றும், அதன் பிறகு போலீசார் தன்னை பார்க்கவில்லை என்றும், விசாரணை செய்யவில்லை என்றும், " சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு. வெங்கடேசன் தனது சாட்சியத்தில், " தான் பாதுகாப்பு துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன் என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு என்ன தெரியும் என்றால், அன்று காலை தான் எழுந்து பார்த்தபோது, வீடு எரிந்து விட்டிருந்தது என்றும், அது மட்டும் தான் தனக்கு தெரியும் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள 2ம் கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், இது சம்பந்தமாக தன்னை போலீசார் விசாரணை செய்யவில்லை என்றும், " சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா. 3 திருமதி. மஞ்சுளா தனது சாட்சியத்தில், " தான் தற்போது வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன் என்றும், இந்த வழக்கில் புகார்தாரரர் சிவகங்கா மற்றும் ஆஜர் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், சிவகங்கா தனக்கு சொந்தமில்லை என்றும், 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் அவர் வீடு எரிந்த விவரம் தனக்கு காலையில் தான் தெரியும் என்றும், வீடு எரிந்த பிறகு தான் தெரியும் என்றும்,

யார் கொளுத்தினார்கள் என்றும், சிவகங்கைக்கும் வேறு யாருக்கும் முன் விரோதம் இருந்ததா? என்றும் தனக்கு தெரியாது என்றும், இது சம்பந்தமாக தன்னை போலீசார் விசாரணை செய்யவில்லை என்றும்," சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.4 திரு. வினோத் தனது சாட்சியத்தில், " தான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன் என்றும், தான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 சிவகங்கை தனது மனைவியாவார் என்றும், ஆஜர் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், அ.சா.2 வெங்கடேசன், அ.சா.3 மஞ்சுளா ஆகியோர்கள் தனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள் என்றும், தங்களுக்கும், ஆஜர் எதிரிக்கும் எந்தவிதமான விரோதமும் இல்லை என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் சென்னையில் இருந்த போது, தன் மனைவி போன் மூலமாக வீடு எரிந்து விட்டதாக தகவல் சொன்னார் என்றும், எவ்வாறு எரிந்தது என்று அவர் சொல்லவில்லை என்றும், எனக்கும் அது குறித்து தெரியாது என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும், இது சம்பந்தமாக தனது மனைவி காவல் நிலையம் சென்று தகவல் சொல்லியுள்ளார் என்றும்," சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ..சா.5 திரு. வெற்றிவேல் தனது சாட்சியத்தில், தான் தற்போது சென்னையில் அரசு பள்ளிக்கூடத்தில் ஸ்மார்ட் கிளாஸில் டெவலப்மெண்ட் மேனேஜராக பணி செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் எதிரி வீரபத்திரனின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்தை சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் விழுப்புரம்

தாலுக்கா காவல் நிலையத்திற்கு சொந்த வேலை காரணமாக சென்றபோது எழுதாத ஒரு வெள்ளை தாளில் அங்கு தான் வந்ததற்கு ஆதாரமாக கையொப்பம் பெற்றார்கள் என்றும், வேறு ஒன்றும் தனக்கு தெரியாது என்றும், தன் முன்னிலையில் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள ஒன்றாம் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் " சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) அ..சா .6 திரு. முருகராஜ் தனது சாட்சியத்தில், தான் தற்போது விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் என்றும், கடந்த 02/06/2023-ம் தேதி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது, ஜானகிபுரம் கிராமத்தை சேர்ந்த வினோத் மனைவி சிவகங்கா என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான ஒரு புகாரை கொடுத்துக் கொண்டார் என்றும், அந்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண். 407 / 2023, இ.த.ச பிரிவுகள் 294 (b), 436 -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த புகாரில் வீரபத்திரனுக்கும், அவர் குடும்பத்திற்கும் இடையே உள்ள விரோதம் குறித்தும், தன் வீடு கொளுத்தி அழிம்பு செய்ததற்கான காரணத்தையும் அதில் சொல்லியிருந்தார் என்றும், தன்னிடம் காட்டப்படுவது தான் அந்த புகார் என்றும், அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், தான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், புகாரையும், அச்சு முதல் தகவல் அறிக்கையையும் சேர்த்து முறையாக நீதித்துறை நடுவர் விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், ஒரு பிரதியை மேலதிகாரிக்கும்,

மற்றொரு பிரதியை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன் என்றும், அப்போது பணியில் இருந்த ஆய்வாளர் திரு.ஆனந்தன் அவர்கள் அதை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்கள் என்றும், அந்த விசாரணையின் போது ஆய்வாளருக்கு தான் துணையாக இருந்ததாலும், ஆய்வாளரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு பரீட்சயம் என்பதாலும், ஆவணங்களின் அடிப்படையில் ஆய்வாளர் மேற்கொண்ட விசாரணை பற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் சென்று, சம்பவ இடமான ஜானகிபுரம் முருகன் கோயில் தெருவில் உள்ள சிவகங்கா என்பவரின் எரிந்த வீட்டின் எதிரில் வைத்து, சாட்சிகள் முகமது தாஹிர், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் குறித்து முடிவு செய்ய ஒரு பார்வை மகசர் தயார் செய்துள்ளார்கள் என்றும், அந்த பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், அந்தப் பார்வை மகசர் அ.சா.ஆ.5 என்றும், பின்பு ஒரு மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்கள். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்பு காலை 9.00 மணியளவில் எரிந்த சிவகங்காவின் கூரை வீட்டில் இருந்து அதே சாட்சிகள் முன்னிலையில், 1.பாதி எரிந்தும், எரியாமலும் இருந்த வைக்கோல் சிறிதளவு, 2.எரிந்தும், எரியாத நிலையில் உள்ள துணி சிறிதளவு, 3.முழுவதும் எரிந்த நிலையில் உள்ள மர கறி துண்டுகள் சிறிதளவு, ஆகியவைகளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார்கள் என்றும், அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் தன்னிடம் காட்டப்படுவது தான் என்றும், அது அ.சா.ஆ.7 என்றும், மேற்படி சான்று

பொருட்களை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சி கூறினார் என்றும், சாட்சி சரியாக அடையாளம் காட்டினார் என்றும், அவைகள் முறையே சா.பொ.1, 2, 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவ சாட்சிகள் சிவகங்கா, மஞ்சுளா, வினோத், பாரத் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு பார்வை மகசர் சாட்சிகள் முகமது தாஹிர், மற்றும் வெங்கடேசன், ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், ஆய்வாளர் அவர்கள் விசாரணையில் சம்பவம் உண்மை என்றும், எதிரி குறித்து சொன்னது உண்மை என்றும், தெரிய வந்து எதிரியை தேட ஆய்வாளருக்கு அவரது ரகசிய புலனாளி கொடுத்த தகவலின் பேரில், ஜானகிபுரம் ஏரிக்கரையில் இருப்பதாக தெரிந்து, சாட்சிகள், ரகசிய புலனாளி எதிரியை அடையாளம் காட்ட, மதியம் 1.00 மணியளவில் காரணம் கூறி கைது செய்துள்ளார் என்றும், பின்பு அவரை சாட்சிகள் 1.வெற்றிவேல் த/பெ.ரமேஷ், வல்லரசு த/பெ.தட்சணாமூர்த்தி, அவர்கள் முன்னிலையில் எதிரி வீரபத்திரனை விசாரிக்க அவர் எந்த வற்புறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டுள்ளார் என்றும், அதை ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள் என்றும், அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் தன்னை அழைத்து சென்றால், சிவகங்கா வீட்டை கொளுத்திய இடத்தை அடையாளம் காட்டுவேன் என்று கூறியுள்ளார் என்றும், பின்பு சாட்சிகளை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு

எதிரியை காவல் நிலையம் அழைத்து சென்று பாராவிடம் ஒப்புவித்தும், பின்பு உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி முறையாக எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், சான்றாவணங்கள், சான்று பொருட்கள், ஆகியவற்றை முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள் என்றும், பின்பு வழக்கு சொத்தினை படிவம் - 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள் என்றும், அந்த படிவம் - 95 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், ஆய்வாளர் அவர்கள் தன்னை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்கள் என்றும், பிறகு ஆய்வாளர் அவர்கள் விசாரணை முடித்து, எதிரி வீரபத்திரன் த/பெ.கலியன் என்பவர் மீது இ.த.ச பிரிவுகள். 294(b), 436 படி இறுதி அறிக்கை தயார் செய்து முறையாக நீதிமன்றத்திற்கு அனைத்து ஆவணங்களுடன் அனுப்பி வைத்துள்ளார்கள் என்றும், ஆய்வாளரின் விசாரணையில், சாட்சி சிவகங்கா எதிரிக்கும், தங்களுக்கும் உள்ள முன்விரோதம் குறித்தும், முதல் நாள் நடந்த சம்பவம் குறித்தும், காவல் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமான புகார் கொடுத்துக் கொண்டது பற்றியும், சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி மஞ்சுளா, வினோத், ஆகியோர்கள் சம்பவம் குறித்தும், முன்விரோதம் குறித்தும், சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான் என்றும், சாட்சி வெங்கடேசன் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் குறித்து விசாரணை செய்து பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தபோது உடனிருந்து கையொப்பம் செய்ததாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி வெற்றிவேல் எதிரி வீரபத்திரனை கைது செய்த போதும், அவரை விசாரணை செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த போதும், உடனிருந்து

அதில் கையொப்பம் இட்டதாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும் " சாட்சியம் அளித்துள்ளார்.

9) இருதரப்பு வாய்மொழி சாட்சியம் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகளையும் ஆய்வு செய்ததில், இந்நீதிமன்றம் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாக கருதுவது என்னவெனில்,

( 1) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட இதச . பிரிவு. 294(b), 436 ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

10) <u>பிரச்சனை எண். 1 -</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பு சாட்சிகள், இருதரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டன.

11) <u>அரசு தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் -</u>

(i) இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், விழுப்புரம் தாலுக்கா, ஜானகிபுரம் கிராமத்தில் வசித்து வரும் இவ்வழக்கு 1வது சாட்சி சிவகங்கா என்பவருக்கும் எதிரியான வீரபத்திரன் த/பெ. கலியன் என்பவருக்கும் எதிரியின் மகன்கள் மீது பாலியல் தொந்தரவு சம்பந்தமாக அனைத்து

மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தது சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 01.06.2023 ம் தேதி 18.30 மணிக்கு மேற்படி வீரபத்திரன் 1வது சாட்சியின் வீட்டருகே குடிபோதையில் வந்து சாட்சி.1 யை பார்த்து தேவிடியா இதெல்லாம் ஒரு பொழப்பா என்று அசிங்கமாக திட்டி நீ தானே என் மகன்கள் மீது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாய் . உன்னுடைய வீட்டை கொளுத்தி இந்த ஊரை விட்டே ஓட செய்கிறேன் பார் என்று அசிங்கமாக திட்டியும் பின்னிட்டு அன்றைய தினம் அதிகாலை 03.00 மணிக்கு சுமார் 50,000/- மதிப்புள்ள பொருட்களையும் 1வது சாட்சிக்கு சொந்தமான வீட்டையும் தீயிட்டு கொளுத்தியும் குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியானவர் இதச பிரிவுகள். 294(பி), 436 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்றும்",

(ii) மேலும் இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் , இந்த வழக்கில் முக்கிய சாட்சிகளான அ.சா.1 சிவகங்கா , அ.சா.2 பார்வை மகசர் சாட்சி. வெங்கடேசன் , அ.சா.3 மஞ்சுளா , அ.சா.4 வினோத்குமார், அ.சா.5 ஒப்புதல் வாக்குமூல சாட்சி வெற்றிவேல் ஆகியோர்கள் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்து இருந்தாலும், அ.சா. 6 முருகராஜ் காவல் துறை அதிகாரியின் சாட்சியத்தின் மூலம், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்றும். எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சங்கிலி தொடர் போல் அமைந்துள்ளது என்றும், அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிபடுத்துகிறது என்றும், எனவே எதிரியை

இதச பிரிவுகள் .296(பி), 436 ன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**12) எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் -**

இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட முக்கிய சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் அனைவரும் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், குறிப்பாக புகார்தாரர் சிவகங்கை மற்றும் அ.சா.2 பார்வை மகசர் சாட்சி வெங்கடேசன், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா. 3 மஞ்சுளா, அ.சா. 4 வினோத், ஒப்புதல் வாக்குமூல சாட்சி. அ.சா.5 வெற்றிவேல் ஆகியோர் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், இந்த சங்கதி அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைந்துள்ளது என்றும், எனவே அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமும் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் மூலமும், சான்று பொருட்கள் மூலமும், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்படவில்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**13) இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில் இந்த வழக்கை கவனத்துடன் பரிசீலித்து பார்க்கும்போது, இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் புகார்தாரரின் சாட்சியத்தின் மூலமும், கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமும், பார்வை மகசர் சாட்சி, புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் மூலமும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை**

குறித்து பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் ஆகும். அதே போல , குற்ற நோக்கம், சம்பவயிடம், அரசு தரப்பில் நிரூபணம் செயயப்பட்டுள்ளதா? என்பதை குறித்தும் பரிசீலிக்க வேண்டியது அவசியம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14) <u>புகார்தாரர் , கண்ணுற்ற சாட்சிகள் ஆகியோர்களின் சாட்சியங்களின் அடிப்படையில் 1ம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?</u>**

(i) இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 ஆக சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான திருமதி. சிவகங்கை என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார் . அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில்,

> “ எதிரி வீரபத்திரனை தனக்கு தெரியும் என்றும், அவர் தனக்கு அண்ணன் முறை ஆவார் என்றும், வீரபத்திரன் குடும்பத்திற்கும் தங்கள் குடும்பத்திற்கும் இடையில் எந்த முன் விரோதமும் இல்லை என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நாங்கள் தங்கள் வீட்டில், தான், தனது கணவர் வினோத், என்பாண்டி, மாரிமுத்து, தன் மகன்கள் தரணிதரன், மோனிஷ் ஆகியோர் அன்று இரவு வீட்டில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தபோது, தங்கள் வீட்டின் கூரை எரிவதாக வெளிச்சம் தெரிந்து நாங்கள் எழுந்து பார்த்தோம் என்றும், வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது என்றும், நாங்கள் வெளியே சென்று இதற்கு காரணம் யார் என்று தேடினோம் என்றும், யார் என்று தங்களுக்கு தெரியவில்லை என்றும், வீடு எப்படி எரிந்தது என்று தங்களுக்கு தெரியாது என்றும், வீட்டின் மூலையில்

எரிந்து கொண்டிருந்தது என்றும், தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தோம் என்றும், தீயணைப்பு துறையினர் வந்து தீயை அணைத்தனர் என்றும், இது சம்பந்தமாக விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் சென்று விவரம் சொன்னேன் என்றும், விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய போலீசார் தன்னிடம் எழுதாத ஒரு வெள்ளைத் தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், காவல்துறையினர் வந்து விசாரணை செய்தார்கள் என்றும், ஆனால் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும், அங்கிருந்து பொருட்கள் எதையாவது காவல்துறையினர் எடுத்துச் சென்றார்களா? என்றால் எனக்கு தெரியாது என்றும், அதன் பிறகு போலீசார் தன்னை பார்க்கவில்லை என்றும், விசாரணை செய்யவில்லை என்றும் "

சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

(ii) இந்த வழக்கில் அ.சா.2 ஆக சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அரசு தரப்பில் காண்பிக்கப்பட்டுள்ள மஞ்சுளா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில்,

" "தான் தற்போது வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன் என்றும், இந்த வழக்கில் புகார்தாரரர் சிவகங்கா மற்றும் ஆஜர் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், சிவகங்கா தனக்கு சொந்தமில்லை என்றும், 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் அவர் வீடு எரிந்த விவரம் தனக்கு காலையில் தான் தெரியும் என்றும், வீடு எறிந்த பிறகு

தான் தெரியும் என்றும், யார் கொளுத்தினார்கள் என்றும், சிவகங்கைக்கும் வேறு யாருக்கும் முன் விரோதம் இருந்ததா? என்றும் தனக்கு தெரியாது என்றும், இது சம்பந்தமாக தன்னை போலீசார் விசாரணை செய்யவில்லை என்றும்,"

சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) இந்த வழக்கில் அ.சா. 4 ஆக சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அரசு தரப்பில் காண்பிக்கப்பட்டுள்ள வினோத் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில்,

" தான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன் என்றும், தான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 சிவகங்கை தனது மனைவியாவார் என்றும், ஆஜர் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், அ.சா.2 வெங்கடேசன், அ.சா.3 மஞ்சுளா ஆகியோர்கள் தனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள் என்றும், தங்களுக்கும், ஆஜர் எதிரிக்கும் எந்தவிதமான விரோதமும் இல்லை என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் சென்னையில் இருந்த போது, தன் மனைவி போன் மூலமாக வீடு எரிந்து விட்டதாக தகவல் சொன்னார் என்றும், எவ்வாறு எரிந்தது என்று அவர் சொல்லவில்லை என்றும், எனக்கும் அது குறித்து தெரியாது என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும், இது சம்பந்தமாக தனது மனைவி காவல் நிலையம் சென்று தகவல் சொல்லியுள்ளார் என்றும்," சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

(iv ) இந்த வழக்கில் மேற்படி முக்கிய சாட்சிகளான புகார்தாரர் ( அ.சா.1 )

கண்ணுற்ற சாட்சி அ.சா. 3, அ.சா.4 ஆகியோர் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளது அரசுதரப்பு வழக்கை பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. எனவே புகார்தாரர்,. கண்ணுற்ற சாட்சிகள் ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலமும், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**15) பார்வை மகசர் , ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?**

(i) இந்த வழக்கில் அ.சா. 2 ஆக பார்வை மகசர் சாட்சி வெங்கடேசன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் ,

" " தான் பாதுகாப்பு துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன் என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு என்ன தெரியும் என்றால், அன்று காலை தான் எழுந்து பார்த்தபோது, வீடு எரிந்து விட்டிருந்தது என்றும், அது மட்டும் தான் தனக்கு தெரியும் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள 2 ம் கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், இது சம்பந்தமாக தன்னை போலீசார் விசாரணை செய்யவில்லை என்றும், "

சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

(ii) இந்த வழக்கில் அ.சா.5 ஆக கைப்பற்றுதல் மகசர் சாட்சி

வெற்றிவேல் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் ,

" தான் தற்போது சென்னையில் அரசு பள்ளிக்கூடத்தில் ஸ்மார்ட் கிளாஸில் டெவலப்மெண்ட் மேனேஜராக பணி செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் எதிரி வீரபத்திரனின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்தை சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்திற்கு சொந்த வேலை காரணமாக சென்றபோது எழுதாத ஒரு வெள்ளை தாளில் அங்கு தான் வந்ததற்கு ஆதாரமாக கையொப்பம் பெற்றார்கள் என்றும், வேறு ஒன்றும் தனக்கு தெரியாது என்றும், தன் முன்னிலையில் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள ஒன்றாம் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும்,

" சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

(iii) மேற்படி அ.சா.2 , அ.சா. 5 ஆகியோர் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ள நிலையில் இந்த வழக்கில் பார்வை மகசர் , கைப்பற்றுதல் மகசர் ஆகியவை அரசு தரப்பு சாட்சியத்தின் மூலம் உறுதிபடுத்தப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே அதன் அடிப்படையில் இந்த வழக்கில் பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளின் மூலம், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**16 ) புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் மூலம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ளதா?**

(i) இந்த வழக்கில் அ.சா.6 ஆக புலன் விசாரணை அதிகாரி திரு . முருகராஜ் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில்,

" தான் தற்போது விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் என்றும், கடந்த 02/06/2023-ம் தேதி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது, ஜானகிபுரம் கிராமத்தை சேர்ந்த வினோத் மனைவி சிவகங்கா என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான ஒரு புகாரை கொடுத்துக் கொண்டார் என்றும், அந்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண். 407 / 2023, இ.த.ச பிரிவுகள் 294 (b), 436 -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த புகாரில் வீரபத்திரனுக்கும், அவர் குடும்பத்திற்கும் இடையே உள்ள விரோதம் குறித்தும், தன் வீடு கொளுத்தி அழிம்பு செய்ததற்கான காரணத்தையும் அதில் சொல்லியிருந்தார் என்றும், தன்னிடம் காட்டப்படுவது தான் அந்த புகார் என்றும், அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், தான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், புகாரையும், அச்சு முதல் தகவல் அறிக்கையையும் சேர்த்து முறையாக

நீதித்துறை நடுவர் விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், ஒரு பிரதியை மேலதிகாரிக்கும், மற்றொரு பிரதியை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன் என்றும், அப்போது பணியில் இருந்த ஆய்வாளர் திரு.ஆனந்தன் அவர்கள் அதை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்கள் என்றும், அந்த விசாரணையின் போது ஆய்வாளருக்கு தான் துணையாக இருந்ததாலும், ஆய்வாளரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு பரீட்சயம் என்பதாலும், ஆவணங்களின் அடிப்படையில் ஆய்வாளர் மேற்கொண்ட விசாரணை பற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் சென்று, சம்பவ இடமான ஜானகிபுரம் முருகன் கோயில் தெருவில் உள்ள சிவகங்கா என்பவரின் எரிந்த வீட்டின் எதிரில் வைத்து, சாட்சிகள் முகமது தாஹிர், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் குறித்து முடிவு செய்ய ஒரு பார்வை மகசர் தயார் செய்துள்ளார்கள் என்றும், அந்த பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், அந்தப் பார்வை மகசர் அ.சா.ஆ.5 என்றும், பின்பு ஒரு மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்கள். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்பு காலை 9.00 மணியளவில் எரிந்த சிவகங்காவின் கூரை வீட்டில் இருந்து அதே சாட்சிகள் முன்னிலையில், 1.பாதி எரிந்தும், எரியாமலும் இருந்த வைக்கோல் சிறிதளவு, 2.எரிந்தும்,

எரியாத நிலையில் உள்ள துணி சிறிதளவு, 3.முழுவதும் எரிந்த நிலையில் உள்ள மர கறி துண்டுகள் சிறிதளவு, ஆகியவைகளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார்கள் என்றும், அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் தன்னிடம் காட்டப்படுவது தான் என்றும், அது அ.சா.ஆ.7 என்றும், மேற்படி சான்று பொருட்களை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சி கூறினார் என்றும், சாட்சி சரியாக அடையாளம் காட்டினார் என்றும், அவைகள் முறையே சா.பொ.1, 2, 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவ சாட்சிகள் சிவகங்கா, மஞ்சுளா, வினோத், பாரத் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு பார்வை மகசர் சாட்சிகள் முகமது தாஹிர், மற்றும் வெங்கடேசன், ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், ஆய்வாளர் அவர்கள் விசாரணையில் சம்பவம் உண்மை என்றும், எதிரி குறித்து சொன்னது உண்மை என்றும், தெரிய வந்து எதிரியை தேட ஆய்வாளருக்கு அவரது ரகசிய புலனாளி கொடுத்த தகவலின் பேரில், ஜானகிபுரம் ஏரிக்கரையில் இருப்பதாக தெரிந்து, சாட்சிகள், ரகசிய புலனாளி எதிரியை அடையாளம் காட்ட, மதியம் 1.00 மணியளவில் காரணம் கூறி கைது செய்துள்ளார் என்றும், பின்பு அவரை சாட்சிகள் 1.வெற்றிவேல் த/பெ.ரமேஷ், 2) வல்லரசு த/பெ.தட்சணாமூர்த்தி, அவர்கள் முன்னிலையில் எதிரி வீரபத்திரனை

விசாரிக்க அவர் எந்த வற்புறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டுள்ளார் என்றும், அதை ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள் என்றும், அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் தன்னை அழைத்து சென்றால், சிவகங்கா வீட்டை கொளுத்திய இடத்தை அடையாளம் காட்டுவேன் என்று கூறியுள்ளார் என்றும், பின்பு சாட்சிகளை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு எதிரியை காவல் நிலையம் அழைத்து சென்று பாராவிடம் ஒப்புவித்தும், பின்பு உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி முறையாக எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், சான்றாவணங்கள், சான்று பொருட்கள், ஆகியவற்றை முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள் என்றும், பின்பு வழக்கு சொத்தினை படிவம் - 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள் என்றும், அந்த படிவம் - 95 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், ஆய்வாளர் அவர்கள் தன்னை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்கள் என்றும், பிறகு ஆய்வாளர் அவர்கள் விசாரணை முடித்து, எதிரி வீரபத்திரன் த/பெ.கலியன் என்பவர் மீது இ.த.ச பிரிவுகள். 294(b), 436 படி இறுதி அறிக்கை தயார் செய்து முறையாக நீதிமன்றத்திற்கு அனைத்து ஆவணங்களுடன் அனுப்பி வைத்துள்ளார்கள் என்றும், ஆய்வாளரின் விசாரணையில், சாட்சி சிவகங்கா எதிரிக்கும், தங்களுக்கும்

உள்ள முன்விரோதம் குறித்தும், முதல் நாள் நடந்த சம்பவம் குறித்தும், காவல் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமான புகார் கொடுத்துக் கொண்டது பற்றியும், சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி மஞ்சுளா, வினோத், ஆகியோர்கள் சம்பவம் குறித்தும், முன்விரோதம் குறித்தும், சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான் என்றும், சாட்சி வெங்கடேசன் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் குறித்து விசாரணை செய்து பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தபோது உடனிருந்து கையொப்பம் செய்ததாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி வெற்றிவேல் எதிரி வீரபத்திரனை கைது செய்த போதும், அவரை விசாரணை செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த போதும், உடனிருந்து அதில் கையொப்பம் விட்டதாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும் "

சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) இந்த வழக்கில் முக்கிய சாட்சிகளான அ.சா.1 புகார்தாரர் , கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்கள். மற்ற முக்கிய சாட்சியான பார்வை மகசர் சாட்சியான அ.சா.2 கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ,சா.5 ஆகியோர்களின் சாட்சியத்தின் மூலமும் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் எதிரி மீது

சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்படாத நிலையில் அ.சா. 6 காவல்துறை அதிகாரியின் சாட்சியமும், அரசு தரப்புக்கு எந்த அனுகூலத்தையும் ஏற்படுத்தவில்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே , எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் மூலமும் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iii) இந்த வழக்கில் முக்கிய சாட்சிகள் அனைவரும் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ள நிலையில், வழக்கின் பொருண்மைகள் அனைத்தும் சங்கிலி தொடர் போல தெளிவாக அமைந்துள்ளது என்ற முடிவிற்கு இந்த நீதிமன்றத்தால் வர இயலவில்லை. எனவே சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்கள் ( Circumstantial evidence) மூலமும் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை கண்டறிய இயலவில்லை.

17) எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், சாட்சி சிவகங்கா என்பவருக்கும் எதிரியான வீரபத்திரன் த/பெ. கலியன் என்பவருக்கும் எதிரியின் மகன்கள் மீது பாலியல் தொந்தரவு சம்பந்தமாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தது சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 01.06.2023 ம் தேதி 18.30 மணிக்கு மேற்படி வீரபத்திரன் 1வது சாட்சியின் வீட்டருகே குடிபோதையில் வந்து சாட்சி.1 யை பார்த்து தேவிடியா இதெல்லாம் ஒரு பொழப்பா என்று அசிங்கமாக திட்டி நீ தானே என் மகன்கள் மீது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாய் . உன்னுடைய வீட்டை கொளுத்தி இந்த ஊரை விட்டே ஓட செய்கிறேன் பார் என்று அசிங்கமாக திட்டியும் பின்னிட்டு அன்றைய தினம் அதிகாலை 03.00 மணிக்கு சுமார் 50,000/- மதிப்புள்ள பொருட்களையும் 1வது

சாட்சிக்கு சொந்தமான வீட்டையும் தீயிட்டு கொளுத்தியும் குற்றம் புரிந்துள்ளார் என்றும், எதிரி மீது இதச .294(பி), 436 பிரிவின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் இவ்வாறாக பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காண்கிறது.

முடிவாக , எதிரி மீது இதச பிரிவு . 294(பி) , 436 ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு . 235 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். இவ்வழக்கில் எதிரிக்கு ஏற்பட்டுள்ள பிணைமுறிகள் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் இரத்தாகும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

சான்று பொருட்கள் 1 முதல் 3 வரையிலானவைகள் பயனற்றவை என்பதால் அதனை மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

RAJASIMMAVARMAN S
Digitally signed by RAJASIMMAVARMAN S
Date: 2026.04.29 11:32:03 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

**அரசுத்தரப்பு சாட்சிகள் -**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திருமதி. சிவகங்கை |
| 2 | அ.சா.2 | திரு. வெங்கடேசன் |
| 3 | அ.சா.3 | திருமதி. மஞ்சுளா |
| 4 | அ.சா.4 | திரு. வினோத் |
| 4 | அ.சா.5 | திரு. வெற்றிவேல் |
| 6. | அ.சா.6 | திரு. முருகராஜ் ( சிறப்பு உதவி ஆய்வாளர் ) |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள் -**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 02.06.2023 | புகாரில் உள்ள கையொப்பம் |
| 2 | அ.சா.ஆ.2 | 02.06.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து |
| 3 | அ.சா.ஆ.3 | 02.06.2023 | புகார் |
| 4 | அ.சா.ஆ.4 | 02.06.2023 | முதல் தகவல் அறிக்கை |
| 5 | அ.சா.ஆ.5 | 02.06.2023 | பார்வை மகசர் |
| 6 | அ.சா.ஆ.6 | 02.06.2023 | மாதிரி வரைபடம் |
| 7 | அ.சா.ஆ.7 | 02.06.2023 | கைப்பற்றுதல் மகசர் |
| 8 | அ.சா.ஆ.8 | 02.06.2023 | படிவம். 95 |

**அரசு தரப்பு சான்று பொருள் .சி.பி. 23/2026**

1. சா.பொ.1 .. பாதி எரிந்தும் எரியாமலும் உள்ள வைக்கோல் சிறிதளவு.

2. சா.பொ.2 .. எரிந்தும் எரியாமலும் உள்ள துணி சிறிதளவு

3. சா.பொ.3 ... முழுவதும் எரிந்த நிலையில் உள்ள மரக்கரி துண்டுகள் சிறிதளவு.

**எதிரி தரப்பு சாட்சிகள்** - இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்** - - இல்லை.

<table>
<tr><th colspan="5"><u>Case Summary</u></th></tr>
<tr><th>SL.No.</th><th>Description</th><th colspan="3">Details</th></tr>
<tr><td>1</td><td>எதிரி அடைப்பு காவலில் இருந்த காலம் .</td><td colspan="3">எதிரி . 02.06.2023 முதல் 22.06.2023 வரை</td></tr>
<tr><td>2</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான நாள்</td><td colspan="3">09.06.2023</td></tr>
<tr><td>3</td><td>வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட நாள்</td><td colspan="3">29.08.2025</td></tr>
<tr><td>4</td><td>எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள்</td><td colspan="3">16.10.2025</td></tr>
<tr><td>5</td><td>வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுக்களும் அவற்றின் முடிவும் (கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழான மனு நீங்கலாக )</td><td colspan="3">NIL</td></tr>
<tr><td rowspan="4">.</td><td rowspan="4">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சி</td><td>மு.வி</td><td>கு.வி</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>23.01.2026</td><td>23.01.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>23.01.2026</td><td>23.01.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>07.02.2026</td><td>07.02.2026</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.4 | 17.03.2026 | 17.03.2026 |
| | | அ.சா.5 | 18.03.2026 | 18.03.2026 |
| | | அ.சா.6 | 10.04.2026 | 10.04.2026 |
| 7 | எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் வினவப்பட்ட நாள். | 15.04.2026 | | |
| 8 | எதிரி தலைமறைவாக இருந்த காலம் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜரான / ஆஜர்படுத்தப்பட்ட காலம். | NIL | | |
| 9 | மேல் நீதிமன்றங்கள் வழங்கிய ஸ்டே உத்தரவு மற்றும் அதன் முடிவும். | இல்லை | | |

RAJASIMMAVARMAN S Digitally signed by RAJASIMMAVARMAN S Date: 2026.04.29 11:32:15 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,

(விரைவு நீதிமன்றம்),

விழுப்புரம்.

**அசல் / நகல் தீர்ப்பு**

**அமர்வு வழக்கு எண். 191/2025**

**நாள். 16.04.2026.**